செய்தி வெளியீடு **நாள் : 19.06.2024**

வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகளை துரிதபடுத்தும் விதமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வால்டாக்ஸ் ரோட்டில் புதியதாக அமையவுள்ள சமுதாய நலக்கூடம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய இடங்களை

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் கள ஆய்வு

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (19.6.2024) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** வட சென்னை வளர்ச்சித் திட்டப் பணிகளை துரிதபடுத்தும் விதமாக பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–5, வால்டாக்ஸ் ரோடு, அண்ணா பிள்ளை தெருவில் புதியதாக அமையவுள்ள சமுதாய நலக்கூடம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய இடங்களை கள ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயிரினும் மேலான திராவிட முன்னேற்றக் கழக தலைவர் ஆட்சி பொறுப்பேற்ற நாளிலிருந்து வடசென்னையினுடைய அடிப்படை தேவைகளை மக்களுடைய பயன்பாட்டுக்கு ஏற்றார் போல் உருவாக்க வேண்டும் என்ற திட்டமிட்டு அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து முழுமையாக முடித்து விடப்பட்டு வடசென்னை வாடாத சென்னையாக்க வேண்டும் என்ற குறிக்கோளோடு பல்வேறு பணிகளை இந்த மூன்றாண்டு காலம் மேற்கொண்டு வருகின்றார். அதன்ஒரு தொகுப்பாக இந்த ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் தேதி சென்னை தங்கசாலையிலே வடசென்னை வளர்ச்சி திட்டம் என்று அறிவித்து அதற்கு சுமார் 4181 கோடி ரூபாயை பல்வேறு துறைகளில் இருந்து ஒதுக்கீடு செய்தார். அந்த 4181 கோடி ரூபாயில் மேற்கொள்ளப்பட வேண்டிய 219 பணிகளையும் உறுதி செய்து அந்த பணிகளை விரைவுப்படுத்துவதற்காக பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து பல்வேறு வளர்ச்சி பணிகளை நேரடியாக களத்திற்கு சென்று ஆய்வு செய்து அந்த வளர்ச்சி பணிகளை 2025 ஆம் ஆண்டுக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்று **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** உத்தரவின் பேரில் இன்றைக்கு சென்னை பெருநகரத்துடைய ஆணையாளர் அன்பிற் ய டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் அவர்களும் நம்முடைய பெருநகரத்துடைய மேயர்

திருமதி.ஆர்.பிரியா அவர்களும் எங்கள் துறையினுடைய செயலாளர் திருமதி.காகர்லா உஷா அவர்களும், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் குழும உறுப்பினர் செயலர் திரு. அன்சுல் மிஸ்ரா அவர்களும் மாநகராட்சி கூடுதல் ஆணையர் மற்றும் வட்டார துணை ஆணையர் அவர்களும் இன்றைக்கு இந்த பணிகளை மேற்பார்வையிட்டிருக்கிறோம்.

இன்று காலை நாங்கள் மேற்பார்வையிட்ட பணிகள் சாலை ஓரமாகவும் கால்வாய் ஓரமாகவும் குடியிருக்கின்ற மக்களுக்கு மாற்று நிரந்திர குடியிருப்பை ஏற்படுத்துவதற்காக சென்னை பெருநகர மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத இடத்தை கேட்டிருக்கின்றோம். அந்த இடத்தை இன்றைக்கு கள ஆய்வு மாநகராட்சி ஆணையரோடு மேற்கொண்டு இருக்கின்றோம். அதேபோல் இந்த தொகுதியிலே வருமை கோட்டிற்கு கீழ் வசிக்கின்ற மக்கள் அதிகமாக இருப்பதால் தனியார் பள்ளிகளில் சேர்ந்து அதிக கட்டணம் கொடுத்து படிக்க முடியாத சூழ்நிலை இருப்பதால் வால்டாக்ஸ் சாலையிலே அமைந்து இருக்கின்ற ஒரு உயர்நிலை பள்ளியை மேம்படுத்துதல், புதியதாக இந்த காலத்திற்கு ஏற்றால்போல் நவீனமயமாக்கின்ற பணியை மேற்கொண்டிருக்கிறோம், அதையும் இன்று பார்வையிட்டிருக்கிறோம்.

இந்த பகுதியிலே விளையாட்டு திடல் என்பது பெரிதாக இல்லை என்பதால் வடச்சென்னை வளர்ச்சி திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்ற இந்த சென்னை மாநகராட்சி சொந்தமான இந்த விளையாட்டு திடலோடு சேர்த்து இன்னும் கூடுதலாக ஒன்றறை ஏக்கர் நிலத்தை மாநகராட்சியிடம் பெற்று அதை முழுவதுமாக வடிவமைத்து அனைத்து வகையான விளையாட்டுகளையும் இந்த விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தி கொள்வதற்கு ஏற்ற வகையில் உருவமைப்பதற்கும் இன்றைக்கு ஆய்வினை மேற்கொள்ள இருக்கிறோம். இந்த பணிகள் எல்லாம் வெகுவிரைவில் மூன்று மாதம் / நான்கு மாத காலத்திற்குள் தொடங்கப்பட்டு 2025 ஆண்டு இறுதிக்குள் இந்த பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருகின்ற பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம்.

வடசென்னையினுடைய வளர்ச்சி திட்ட பணிகளை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும்** தொடர் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி நேரடியாக தன்னுடைய கண்காணிப்பிலே வைத்திருக்கின்றார். அவர்களுடைய அந்த சுழற்சி முறையான பணிகளுக்கு ஈடாக நாங்களும் உறுதுணையாக இருந்து இந்த பணிகளை தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு பணிகளை துரிதப்படுத்துவதற்கு அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து இது போன்ற ஆய்வுகளை தொடர்ந்து மேற்கொள்வோம். **இவ்வாறு மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அவர்கள், கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர். லலிதா, இ.ஆ.ப., அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., அவர்கள், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, மண்டலக் குழுத்தலைவர் திரு.ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் திரு.தமிழ்ச்செல்வன், மாமன்ற உறுப்பினர் திரு.ராஜேஸ் ஜெயின் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate